முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# சேலம் மத்திய மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தில் சுயமாரியாதை உணர்வில் தந்தை பெரியாரையும், ஒரு இயக்கத்தை கொள்கை அடிப்படையிலும் அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்து நடத்திச் செல்வதில் பேரறிஞர் அண்ணாவின் கனிவையும், இயக்கத்தை எந்த சூழ்நிலையிலும் போராட்ட உணர்வோடு, உயிர்ப்போடு வைத்திருப்பதில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் உறுதியையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தலைவர். தமிழ்ச் சமுதாயத்திற்காக கழகப் பணியிலும் - ஆட்சிப் பணியிலும் அரைநூற்றாண்டு கண்ட பெருமைக்குச் சொந்தக்காரார். தமிழ்நாட்டின் ஒவ்வொரு மகளிருக்கும் தந்தையாக சகோதரனாக இருந்து வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், மகளிர் விடியல் பயணத்திட்டம், காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் என வகுத்த திட்டங்களால் இந்திய துணைகண்டமே வியந்து பாராட்டும்"திராவிட மாடல்" ஆட்சி நாயகர். இவ்வளவு பெருமைகளையும் சிறப்புகளையும் கொண்ட கழகத்தின் ஒப்பற்ற தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் ஆண்களுக்கான கிரிக்கெட், கைப்பந்து, கால்பந்து, கபடி, இறகுபந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, தடகளம் (Athletics), மேசைப்பந்தாட்டம் (Table Tennis), மிதிவண்டி ஓட்டுதல்,

கராத்தே, பளுதூக்குதல், யோகா, வாள்வீச்சு, உடற்கட்டமைப்பு (Body Building), வளைப்பந்தாட்டம் (Hockey), எறிபந்தாட்டம் (Handball), நெடுஞ்சாலை ஓட்டம் (Marathon), வரிப்பந்தாட்டம் (Tennis), பானை உடைத்தல், வழுக்கு மரம் ஏறுதல், உள்ளிட்ட போட்டிகளையும், மகளிருக்கான கோலப்போட்டி, கயிறாட்டம் (Skipping), கயிறு இழுத்தல் போட்டி, மிதிவண்டி போட்டி, கோகோ, இசைநாற்காலி, கையுந்து போட்டி, கோலாட்டம், ஏழுக்கல் போட்டி, சாக்குப்பை நொண்டி விளையாட்டு, ஓவியபோட்டி உள்ளிட்ட போட்டிகளை நடத்தியும் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் கழகத் தலைவர் அவர்களின் "திராவிட மாடல்" அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்களை நடத்தியும், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கியும் எழுச்சியோடு கொண்டாடிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**போற்றுதலுக்குரிய கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் "திராவிட மாடல்" அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்**

| பகுதி/ஒன்றியம்/பேரூர் | நாள் | பேச்சாளர்கள் | கைபேசி |
|---|---|---|---|
| ஓமலூர் பேரூர் | 03.03.2025 | 1) பசும்பொன். ரவிச்சந்திரன்<br>2)ர.ராஜேஷ் கிருஷ்ணகிரி | 94435 50161<br>79041 51356 |
| காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் | 04.03.2025 | 1) ஆடுதுறை. உத்திராபதி<br>2)அஜித்குமார் - சேலம் | 94431 95941<br>90256 83397 |
| ஓமலூர் வடக்கு ஒன்றியம் | 04.03.2025 | 1) தூத்துக்குடி. சரத்பாலா<br>2) கபில் - சேலம் | 82202 03615<br>81100 53490 |
| அழகாபுரம் பகுதி | 04.03.2025 | 1) பசும்பொன். ரவிசந்திரன்<br>2) நிக்கிதா | 94435 50161<br>84388 17515 |
| சூரமங்கலம் பகுதி | 05.03.2025 | 1) ஆடுதுறை. உத்திராபதி<br>2) சூர்யபிரகாஷ் | 94431 95941<br>82489 65718 |
| தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம் | 05.03.2025 | 1) தூத்துக்குடி. சரத்பாலா<br>2) ச.பரத் | 8220203615<br>93454 75905 |
| அம்மாபேட்டை பகுதி | 07.03.2025 | 1) நாகை. நாகராஜ்<br>2) நந்தகுமார் | 94433 21137<br>70925 47444 |
| செவ்வாய்ப்பேட்டை பகுதி | 07.03.2025 | 1) கரூர். முரளி<br>2) சீனிவாசன் | 94431 22557<br>99527 24645 |
| காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | 07.03.2025 | 1) சைதை. சாதிக்<br>2) சேலம் திவ்யா | 9566016668<br>63693 77761 |
| குமாரசாமிபட்டி பகுதி | 08.03.2025 | 1) வண்ணை. புகாரி<br>2) தாரணி - ஈரோடு | 6380543209<br>93849 23162 |
| குகை பகுதி | 08.03.2025 | 1) நாகை. நாகராஜ்<br>2) க.முல்லைவேந்தன் | 9443321137<br>96551 51314 |
| காடையாம்பட்டி பேரூர் | 09.03.2025 | 1) தமிழன் பிரசன்னா<br>2) தங்கமுத்து | 9566111414<br>8489839600 |
| ஓமலூர் தெற்கு ஒன்றியம் | 09.03.2025 | 1) வண்ணை. புகாரி<br>2) எஃபினா மேரி | 6380543209<br>8825889902 |
| சேலம் வடக்கு ஒன்றியம் | 09.03.2025 | 1) சேலம். சுஜாதா<br>2) புதுவை கருணாநிதி | 9626050717<br>9092909330 |
| கன்னங்குறிச்சி பேரூர் | 09.03.2025 | 1) போடி. காமராஜ்<br>2) செல்வமணி | 9944330220<br>94891 43542 |
| கொண்டலாம்பட்டி பகுதி | 14.03.2025 | 1) புதுக்கோட்டை. விஜயா<br>2) கீர்த்தனா | 9443527996<br>6369043393 |
| அரிசிபாளையம் பகுதி | 15.03.2025 | 1) கந்திலி. கரிகாலன்<br>2) பவித்ரா | 9786706965<br>7708758228 |
| கருப்பூர் பேரூர் | 16.03.2025 | 1) கந்திலி. கரிகாலன்<br>2) பிரதீபா | 9786706965<br>84891 99516 |
| பொன்னம்மாபேட்டை பகுதி | 16.03.2025 | 1) ஈரோடு. இறைவன்<br>2) செ.யோக ஸ்ரீ சேலம் | 9443304847<br>88381 20101 |
| அஸ்தம்பட்டி பகுதி | 20.03.2025 | 1) பவானி. கண்ணன்<br>2) சேலம் சரண்யா | 9444910784<br>9688499839 |
| மெய்யனூர் பகுதி | 21.03.2025 | 1) மன்னை. இளங்கோவன்<br>2) வா.ராஜேஷ்வரி | 9443475731<br>78069 11307 |
| கிச்சிப்பாளையம் பகுதி | 22.03.2025 | 1) திண்டுக்கல். ஐ.லியோனி<br>2) ப.பிரசாந்த் | 9443214988<br>96881 66127 |
| தாதகாப்பட்டி பகுதி | 22.03.2025 | 1) மன்னை. இளங்கோவன்<br>2) ச.சரண்யா | 9443475731<br>97913 37027 |
| ஓமலூர் கிழக்கு ஒன்றியம் | 23.03.2025 | 1) திண்டுக்கல். ஐ.லியோனி<br>2) நா.நவீன் | 9443214988<br>93616 01258 |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர்
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.



திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 20 கிராம ஊராட்சிகளுக்கு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் கலைஞர் விளையாட்டு உபகரணப் பொருட்களை சட்டப்பேரவைத் துணைத்தலைவர் கு.பிச்சாண்டி திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர்களுக்கு வழங்கினார். உடன் சி.மாரிமுத்து, ஆ. கிருஷ்ணமூர்த்தி, பி.பழனி, ஆர்.ஏழுமலை, உள்ளிட்ட கழகத்தினர் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.



நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.25.45 இலட்சம் மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா 20.02.2025 அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.




பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவ – மாணவர்களிடம் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், கல்வியிலும் வாழ்விலும் வெற்றிகளை பெறவும் அதற்கான வழிகாட்டுதல்களை வழங்கும் நிகழ்ச்சியானது பெல் பாய்லர் ஆலை வளாகத்தில் உள்ள எம்.டி. ஹாலில், அன்பில் அறக்கட்டளையின் சார்பாக அறக்கட்டளையின் இயக்குனர் ஜனனி மகேஸ் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர் இதில் சிறப்பு விருந்தினராக திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு மாணவ – மாணவிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது

# வன்முறைத் தாக்குதலை ஒருபோதும் ஏற்க முடியாது என இலங்கை அரசிடம் எடுத்துரைப்பு!

## மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவுக்கு – ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கையை விளக்கி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடிதம்!

புதுடெல்லி, பிப். 23-

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது வன்முறை தாக்குதலை கட்டவிழ்த்துவிடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என இலங்கை அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, மக்களவை திமுக குழுத்தலைவர் டி.ஆர். பாலுவிடம், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படும் விவகாரம் தொடர்பாக, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, டி.ஆர்.பாலுவுக்கு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், கடந்த டிசம்பர் மாதம் இலங்கை அதிபர் திசநாயகே, டெல்லி வந்திருந்தபோது தமிழ்நாடு மீனவர்கள் விவகாரம் தொடர்பாக பேசப்பட்டதாக கூறியுள்ளார். தமிழ்நாட்டு மீனவர்களை மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும் என்றும், அவர்கள் மீது வன்முறையாக நடந்து கொள்ளக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டதாகவும் அந்த கடிதத்தில் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மேலும், தொடர்ச்சியாக தமிழ்நாடு மீனவர்களை கைது செய்வதையும், அதிகப்படியான அபராதங்கள் விதிப்பதையும் இலங்கை அதிபரிடம் சுட்டிக் காட்டியதாகவும் கூறியுள்ளார். மீனவர்கள் விடுதலை, அவர்களது படகுகளை விடுவித்தல் மற்றும் மீனவர்களுடன் பேச்சுவார்த்தை ஆகியவற்றை இலங்கை அதிபரிடம் வலியுறுத்தியதாகவும், கடந்த ஜனவரி 28 ஆம் தேதி, தமிழ்நாடு மீனவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சகத்திடம் கடும் எதிர்ப்பை இந்தியா பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் மீது வன்முறை தாக்குதலை கட்டவிழ்த்து விடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும் இலங்கை அரசுடன் இந்திய அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்ட விவகாரங் கள் தொடர்பாக, மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர். பாலுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம், பிப். 23-

விழுப்புரம் வடக்கு மாவட்டப்பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்டதுணைச் செயலாளர் ஆ.ரவிக்குமார் தலைமையில் நாளை (24.02.2025 - திங்கட்கிழமை காலை 10.00 மணி அளவில் செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும்உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.வருகிற 01.03.2025 அன்றுதமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.

2.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. நெசவாளர் அணி - வடக்கு மண்டல நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## கழக நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கை!

சென்னை, பிப். 23 -

கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. நெசவாளர் அணி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட சென்னை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, வடகிழக்கு, திருவள்ளூர் மேற்கு, மத்திய, கிழக்கு, காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு, மாநகரம், தாம்பரம் மாநகரம், கடலூர் கிழக்கு, மேற்கு, விழுப்புரம் வடக்கு, தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர், ஆகிய மாவட்ட - மாநகர தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 25-2-2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கில்' எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஓ.எ.நாகலிங்கம், காஞ்சிபுரம் தி. அன்பழகன் ஆகியோர் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப. சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, பரணி கே.மணி, நெல்லை சொ.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் - வனத்துறை அமைச்சர் பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர், ஆர்.எஸ். பாரதி தலைமைக் கழக செய்தித் தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு ஆகியோர் சிறப்புரையாற்று கிறார்கள். கழக த. ரமேஷ், கே.வெங்கட்ராமன் ஆகியோர் நன்றியுரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் வடக்கு மண்டல நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா; கழக ஆக்கப் பணிகள் - குறித்து.

இவ்வாறு தி.மு.க. நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.